# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

## 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க,

## தேசியச் சுவடிக்கூட (திருத்த)ச் சட்டம்

---

[1981, மே மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

**அரசினரி ஆணைப்படி அச்சிடப்பட்டது**

---

1981, மே மாதம் 21 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 50

## 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சுவடிக்கூட (திருத்த)ச் சட்டம்

[ 1981 மே மாதம் 15 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. ]

ச. வ. —ஓ. 97/78
1225

**1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசியச் சுவடிக்கூடச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்**

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசியச் சுவடிக்கூட (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் 1973 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, தேசியச் சுவடிக்கூடச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், "ஒவ்வொரு மூன்று மாத காலத்திலும் ஆகக் குறைந்தது ஒரு முறையாவது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் ஆகக் குறைந்தது ஒரு முறையாவது" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஈ) நிரந்தரமான பாதுகாப்பிற்காகத் தேசியச் சுவடிக்கூடத்திற்குக் கைமாற்றும்படி பணிப்பாளரினால் தேவைப்படுத்தப்பட்டதும் உருவாக்கப்பட்ட தேதியிலிருந்து இருபத்தைந்து ஆண்டுக் காலத்திற்குக் குறையாத பழமையுடையதுமான ஏதேனும் பதிவேட்டினைக் கைமாற்றுதலும் ; ".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 9அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அது, அச்சட்டவாக்கத்தின் 9அ என்னும் பிரிவாகப் பயனுடையதாதலும் வேண்டும் :—

**"சனாதிபதிச்சுவடிக்கூடப் பிரிவும் பார்வைச் சேவையும்.**

9அ. இச்சட்டத்தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் எது எப்படியிருப்பினும்—

(அ) இலங்கைச் சனாதிபதியின் அலுவலகத்திலுள்ள எல்லாப் பகிரங்கப் பதிவேடுகளையும், அச்சிடப்பட்ட வேறு எவையேனும் விடயங்களையும், சனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும்போது தேசியச் சுவடிக்கூடத்துக்குக் கை

மாற்றுதல், இலங்கைக் குடியரசின் சனாதிபதியின் செயலாளரினது கடமையாதல் வேண்டும்.

(ஆ) (i) சனாதிபதிச் சுவடிக்கூடப் பிரிவில்—

(அ) பந்தி (அ) வின் கீழ் தேசியச் சுவடிக் கூடத்துக்குக் கைமாற்றப்பட்ட எல்லாப் பகிரங்கப் பதிவேடுகளையும் அச்சிடப்பட்ட விடயங்களையும் ; அத்துடன்

(ஆ) குடியரசின் சனாதிபதியொருவரின் அல்லது கடந்தகால சனாதிபதியொருவரின் பதவிக்குரிய வாழ்வில் அல்லது சொந்த வாழ்வில் இடம்பெற்ற ஏதேனும் சம்பவம் பற்றியனவாய் நன்கொடையாகவோ வேறு வகையாகவோ தேசியச் சுவடிக்கூடத்தினால் பெறப்பட்டவையான அத்தகைய எல்லாப் பத்திரங்களையும் ஆவணங்களையும் புதினஅமிசங்களையும் காந்த நாடாக்களையும் தட்டுகளையும் ஒளிப்படங்களையும் அல்லது வேறு எவையேனும் பொருட்களையும்,

சனாதிபதிச் சுவடிக்கூடப் பிரிவில் வைப்பிலிடுதலும், அத்துடன்

(ii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பகிரங்கப் பதிவேடுகளையும், அச்சிடப்பட்ட விடயங்களையும், ஆவணங்களையும் பொருட்களையும் பயன்படுத்திப் பார்வைச் சேவையொன்றினைத் தாபித்தலும் ; அத்துடன்

(iii) ஓராம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய எவையேனும் பகிரங்கப் பதிவேடுகளையும் அச்சிடப்பட்ட விடயங்களையும், ஆவணங்களையும், பொருட்களையும் அடிப்படையாகக் கொண்ட அறிக்கைகளை அவ்வாறு செய்யப்பட வேண்டுமெனச் சனாதிபதியால் வேண்டப்படும் போது சனாதிபதியிடம் சமர்ப்பித்தலும்,

பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" (1) வரலாற்று, பண்பாட்டு, இலக்கிய, பொருளியல் அல்லது அறிவியல் பெறுமதியுடையதும் அல்லது வேறுவகையில் தேசிய முக்கியத்துவம்வாய்ந்ததும், ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையுடையதுமான ஏதேனும் கையெழுத்துப் பிரதியை அல்லது ஆவணத்தை உடைமையில் வைத்துள்ள ஒரு தனிப் பட்ட ஆள் அல்லது ஏதேனும் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அலுவலர், அத்தகைய ஆவணம் அல்லது கையெழுத்துப் பிரதி இருப்பதனைப்பற்றிப் பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆவணத்தின் அல்லது கையெழுத்துப் பிரதியின் சொத்துவத்தில் அல்லது உடைமையில் மாற்றமேற்படும் சந்தர்ப்பத்தில், சொத்துவத்தில் அல்லது உடைமையில் அத்தகைய மாற்றம் ஏற்பட்ட பின்னர் மூன்று மாதங்களுக்குள் அதன் புதிய சொந்தக்காரரினது அல்லது உடைமையாளரினது பெயரையும் முகவரியையும் பணிப்பாளருக்கு அறிவித்தலும் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (அ) அச்சிடப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறுவகையினதாயினுஞ்சரி, அத்துடன் பொதுமக்களுக்கு விற்பதற்கென அல்லது பகிர்ந்தளிப்பதற்கெனக் கருதப்பட்டதாயினுஞ்சரி அல்லது இரகசியமாகச் சுற்றிவரலுக்கெனக் கருதப்பட்டதாயினுஞ்சரி அல்லது அலுவலர்கள் இடையே மட்டும் சுற்றிவரலுக்கெனக் கருதப்பட்டதாயினுஞ்சரி, ஏதேனும் பொது அலுவலகத்தினால் வழங்கப்பட்ட ஆண்டறிக்கை, கணக்குக் கூற்று அல்லது வேறு ஏதேனும் வெளியீடு ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை, அத்தகைய வெளியீட்டின் பின்னர் முப்பது நாட்களுக்குள் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்தல், அத்தகைய பொது அலுவலகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அலுவலரினதும்; ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், " இலக்கிய பெறுமதியுடையதுமான " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " இலக்கிய அல்லது பொருளியல் அல்லது அறிவியல் பெறுமதியுடையதும் அல்லது வேறுவகையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததுமான " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், " பண்பாட்டு அல்லது இலக்கியப் பெறுமதி " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " பண்பாட்டு, இலக்கிய, பொருளியல், அல்லது அறிவியல்

பெறுமதி காரணமாக அல்லது வேறுவகையில் தேசிய முக்கியத்துவம் காரணமாக " என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அதன் (எ) என்னும் பந்தியில், " இலக்கியப் பெறுமதியுடைய " என்னும் சொற்களுக்குப் பதிலாக " இலக்கிய அல்லது பொருளியல் அல்லது அறிவியல் பெறுமதியுடைய அல்லது வேறுவகையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையான " என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

" (2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது, அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அவ் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். ". அத்துடன்

(3) அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (3) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியான அளவு விரைவில் அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் ஒழுங்குவிதி, அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டதாகக் கருதப்படல்வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்படும் ஏதேனும் ஒழுங்குவிதி எந்தத் தேதியன்று அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவிப்பு கசற்றில் வெளியிடப்படுதல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

" (1) தேசியச் சுவடிக்கூடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் பதிவேட்டை, கையெழுத்துப் பிரதியை அல்லது ஆவணத்தை வேண்டுமென்றே உருவழிக்கின்ற, அதில் அடையாளங்களிடுகின்ற, அதைச் சிதைக்கின்ற அல்லது அதற்குச்

சேதமேற்படுத்துகின்ற, அல்லது அதிகாரமின்றி அத்தகைய ஏதேனும் பதிவேட்டை, கையெழுத்துப் பிரதியை அல்லது ஆவணத்தை அகற்றுகின்ற அல்லது இச்சட்டத்தின் அல்லது இதன்கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடு களுக்கு இணங்கவல்லாது வேறுவகையில் ஏதேனும் பகிரங்கப் பதிவேட்டை அழிக்கின்ற, அல்லது இச்சட்டத்தின் அல்லது இதன்கீழாக்கப்பட்ட எவையேனும் ஒழுங்குவிதிகளின் ஏதேனும் ஏற்பாட்டை மீறுகின்ற எவரேனுமாள், குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டதன்மேல் மூன்று மாதங்களுக்கு மேற்படாதவொரு காலத் துக்கான கடூழிய மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாத குற்றப்பணத்திற்கு, அல்லது அத்த கைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். ".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்தல்.**

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரி வின் (1) ஆம், (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் " உதவிப் பணிப்பாளர் ஒருவர் " என்னும் சொற்கள் தோன்றுகின்ற இடங்களில் எல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக, " எவரேனும் பிரதிப் பணிப்பாளர் " என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) " பணிப்பாளர் " என்பதன் வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

' " பணிப்பாளர் " என்பது தேசியச் சுவடிக்கூடப் பணிப்பாளர் எனப் பொருளாகும் என்பதுடன், தேசியச் சுவடிக்கூடப் பிரதிப் பணிப்பாளர் எவரையும் உள்ளடக்கும் ; ' ;

(2) " தேசியச் சுவடிக்கூடம் " என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும் :—

' " சனாதிபதிச் சுவடிக் கூடப் பிரிவு " என்பது 9 ஆ என்னும் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட தேசியச் சுவடிக்கூடத்தின் கிளை அலுவலகமும் களஞ்சியவிடமும் எனப் பொருளாகும் ;'.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30 : (வெளிநாடு) ரூபா 40 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த.பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.